## நல்லொழுக்கம்

“ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்”

ஆமாம்! ஒழுக்கத்தால் மட்டுமே சிறப்பு நமக்கு வந்து சேரும். ஒழுக்கத்தை உயிராக, உயர்வாக மதிப்போருக்கு ஒழுக்கம் உயர்வு தரும். நாள்தோறும் வீட்டில் பெற்றோர்களும், பள்ளிகளில் ஆசிரியர்களும் எமக்கு நல்லொழுக்கங்களைச் சொல்லித் தருகின்றார்கள்.

ஒருவனது சீரிய வாழ்வுக்குச் சிகரமாக அமைவது சிறந்த ஒழுக்கமே என்றால் மிகை ஆகாது! ஒருவருக்குப் பல்வேறு திறமைகள் இருக்கலாம், ஆனால் அவரிடம் ஒழுக்கம் இல்லை என்றால் எதுவுமே இல்லை.

உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல், தீய சொற்களைப் பேசாதிருத்தல், பெரியோரை மதித்து நடத்தல், பிறருக்கு உதவுதல், அறத்தின்வழி பொருள் சேர்த்து மகிழ்ந்து வாழ்தல் போன்றன சில நற்பழக்க வழக்கங்கள் ஆகும். சிறு பருவம் முதற்கொண்டு நாம் நற்பழக்க வழக்கங்களைப் பின்பற்றி வாழ வேண்டும்.

மாணவர்கள் ஆகிய நாம் நல்லொழுக்கத்தைப் பேணி,
உயர்வடைவதையே நமது குறிக்கோளாகக் கொள்வோம்!

ஒழுக்கம் பேணி உயர்வடைவோம்!

நன்றி.
வணக்கம்.